கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

எம்.சி.ஓ.பி எண்.210/2021

ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.பழனியம்மாள் | தொழில் | |
| த/க பெயர் | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 18.11.2025 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் மனுதாரர் ஆவேன். வழக்கு விபத்தில் என் கணவர் இறந்துவிட்டர். விபத்தின் போது என் கணவர் ஓட்டி சென்ற மாட்டுவண்டியில் பூட்டப்பட்டிருந்த மாடு ஒன்றும், மாட்டு வட்டியும் சேதமடைந்தது, மேற்படி சேதமடைந்த மாட்டு வண்டிக்கும், இறந்த மாட்டிற்கும் இழப்பீடு வழங்க கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தை என் முதல் நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். வழக்கு சம்பந்தமான முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.1** ஆக குறியிடப்படுகிறது. வழக்கு விபத்தில் இறந்து போன மாட்டிற்கான பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.அது **ம.சா.ஆ.2** ஆக குறியிடப்படுகிறது. ஆதார் அட்டையின் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டது. அது **ம.சா.ஆ.3** ஆக குறியிடப்படுகிறது. மனு படி தீர்ப்பாளிக்கமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

விபத்து சமயத்தில் எனது கணவர் ஓட்டி சென்ற மாட்டுவண்டியில் அதிகமான லோடு ஏற்றி சென்று மாடு மிரண்டதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுனர் இல்லை என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மாட்டிற்கான தேராயமாக மதிப்பீடு செய்யும் வகைக்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாட்டு வண்டி சேதாரமாணதற்கான தேராயமாக மதிப்பீடு செய்யும் வகைக்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வண்டியில் பூட்டப்பட்டிருந்த மற்றொரு மாட்டிற்கான காயங்களுக்கான

தோராயமாக மதிப்பீடு செய்யும் வகைக்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சேதரத்திற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் எங்களுக்கு இழப்பீடு கிடைக்க தக்கதல்ல என்றால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட லாரியை விபத்து சமயத்தில் ஓட்டி சென்றதற்கு லாரியை ஓட்டுவதற்கான உரிய ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் 1 ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு விதிமுறைகளை மீறி ஓட்டுநர் உரிமம் இல்லாத நபரிடம் கொடுத்து லாரியை ஓட்டி சென்றதால் 1 ஆம எதிர்மனுதாரர் தான் எங்களுக்க இழப்பீடு வழங்க வேண்டும் என்றாலும், 2 ஆம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள அதிகப்படியான இழப்பீடு எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.11.18 17:18:42 +0530

Additional District and Sessions Judge(FAC),

Dindigul.